பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஸூ ஆடி மீ 31 உ வியாழக்கிழமை (16-08-1990) ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 24 கதிர்: 167

# திருமலையில் கண்ணி!

# 13 சிப்பாய்கள் மரணம்!!

## பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, ஆக. 16

நேற்றுக்காலை திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டைக்குச் சற்று அப்பால் உள்ள ஓரிடத்தில் வைத்து, ஸ்ரீலங்கா இராணுவத்தின் வாகன அணி ஒன்றை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கினர். இந்தத் தாக்குதலில் 13 சிப்பாய்கள் உயிரிழந்தனர். பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டன.

சிங்களக் கிராமம் ஒன்றில் காவல் கடமையில் ஈடுபட்ட பின்னர் புல்மோட்டை இராணுவ முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருந்த படையினர் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

குருத்தவெவவுக்கும் ஊரவெவுக்கும் இடையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகத் தெரியவந்தது.

தாக்குதலின் போது பின்வரும் ஆயுதங்களைத் தாங்கள் கைப்பற்றியதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏ. கே. எல். எம் ஜி — 1 ரம் மகஸீன் — 5, 203 பிஸ்டல் — 1, ஷெல் — 6, ரி 81 — 3, ரி 56 1 ரகம் — 3, ரி 56 — 4, சப்பாத்து — 9, மொபைல் செற் — 3,. ஏ. கே. மகஸீன் — 22.

(3ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் அறுவர் பலி

தலைமன்னாரில் நடந்த மோதல் ஒன்றில் ஆறு படையினர் உயிரிழந்தனர் என்று இராணுவ வட்டாரங்கள் கூறின. (ஓ-எ)

## வீரமரணம்

ஆரையம்பதியில் எதிர்பாராத விதமாக படையினரின் சூட்டுக்கு இலக்கான விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான திறியன் சயனைட் அருந்தி வீரமரணமடைந்தார். [ஓ)

## கைதடியிலும் நேற்று விமானக் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஆக. 16

கைதடிப் பகுதியில் நேற்றுக் காலை 8 45 மணியளவில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் இடம் பெற்றது.

சுமார் அரை மணி நேரம் நடந்த குண்டு வீச்சுகளால் அப் பகுதியில் பனை மரங்கள் பல முறிந்து வீழ்ந்தன. பெரிதாகச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. (ஓ-5)

## தள்ளாடி ராணுவத்தினரை வழிமறித்து கடும் தாக்கு

யாழ்ப்பாணம், ஆக. 16

தள்ளாடி முகாம் இராணுவத்தினர் வெளியேறி முன்னேறி வந்த போது, விடுதலைப் புலிகள் முள்ளிப்பள்ளம் பகுதியில் வழி மறித்து கடும் தாக்குதலை நடத்தினர்.

சுமார் ஒன்றரை மணி நேரம் இடம் பெற்ற மோதலின் போது விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான ராஜன் என்பவர் வீரமரணமடைந்தார்.

புலிகளின் கடும் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத படையினர் முகாமுக்குத் திரும்பினர் என்று அறிவிக்கப்பட்டது. (ஓ)

## வீடுகள் எரிப்பு

அக்கரைப்பற்றில் தமிழர்களுக்குச் சொந்தமான பல வீடுகள் முஸ்லிம்கள் சிலரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

## கால் இழப்பு

அக்கரைப்பற்றில் இராணுவத்தினரும் ஊர்காவல் படையினரும் கூட்டாகத் தேடுதல் நடத்தினர்.

தேடுதலின் போது மிதிவெடி ஒன்று வெடித்து, ஒருவர் காலை இழந்தார் [ஓ

# புலிகளின் தலைமையை ஏற்று ஆயுதங்களை ஒப்படைத்தோம்

## ஈரோஸை கலைக்க தவறுகளே காரணம் - பாலகுமாரன்

ஈரோஸ் இயக்கம் நேற்று உத்தியோக பூர்வமாகக் கலைக்கப்பட்டது.

அந்த அமைப்பின் பிரமுகர் திரு. வேலுப்பிள்ளை பாலகுமாரன் இத்தனை நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

நேற்று இதற்கென யாழ்ப்பாணத்தில் கூட்டப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

'ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) இன்றிலிருந்து உத்தியோகபூர்வமாக செயல் இழந்து போகின்றது' என்று அவர் சொன்னார்.

1975ஆம் ஆண்டு ஜனவரி 3ஆம் திகதி அமைக்கப்பட்ட இந்த அமைப்பை தற்போது கலைப்பது என்று எடுக்கப்பட்ட முடிவுக்கான காரணங்களை அவர் செய்தியாளர் மாநாட்டில் விளக்கினார்.

'வடக்கு, கிழக்கு மலையக

(2ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டையில் சிப்பாய் பலி!

கொழும்பு, ஆக. 16

யாழ். கோட்டை முகாம் மீது நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு சிப்பாய் உயிரிழந்ததாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

# ஈழத்தமிழர்களின் பிரச்சினை தமிழகத்துக்கு ஓர் அறைகூவல்

## இன்னல் தீர்க்க மத்திய அரசிடம் கருணாநிதி வலியுறுத்து

சென்னை, ஆக. 16

இலங்கைத் தமிழர் பிரச்சினை இன்று நமது தமிழகத்துக்கு ஓர் அறைகூவலாக சல்லடம் கட்டிக்கொண்டு நிற்கிறது.

முதலமைச்சர் கருணாநிதி நேற்று நிகழ்த்திய சுதந்திர தின உரையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. கருணாநிதி மேலும் சொன்னதாவது:-

தமிழீழ மக்கள் விமானக் குண்டு வீச்சுக்களுக்குத் தப்பி உடைமைகளை இழந்து, ஓட்டாண்டிகளாக -தமிழகத்தில் அடைக்கலம் புகுவதற்காக- சுமார் 70 ஆயிரம் பேர் வந்துள்ளனர்.

அவர்களது கண்ணீர் துடைக்கப்பட்டு, மீண்டும் தமிழீழத்தில் அமைதி நிலை நாட்டப்பட, அந்த அமைதியும் நிரந்தரமாக அமைந்திட வேண்டும். அத்தகைய நிலையை ஏற்படுத்த மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கை

(3ஆம் பக்கம் பார்க்க)

## வங்கிகள் இன்று: இயங்கும்

யாழ்ப்பாணம், ஆக. 19

யாழ்நகரில் உள்ள இலங்கை வங்கி, மக்கள்வங்கிக் கிளைகள் இன்று இயங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் தனியார்வங்கிகள் நாளை முதலே இயங்கும் என்று கூறப்பட்டது. (இ-3)

# நல்லூர் பகுதியில் நேற்று மாலை குண்டு வீச்சு; "றொக்கட்" தாக்குதல்

## ஒன்பது பொதுமக்கள் காயமுற்றனர்

யாழ்ப்பாணம், ஆக. 16

நேற்றுமாலை 5-45 மணியளவில் யாழ். நகரப் பகுதிக்கு வந்த இரு பொம்மர்கள் முதலில்கோட்டைப்பகுதியைச்சுற்றிச் சுழன்றபடி நின்றுவிட்டு திடீரென நல்லூர்ப் பகுதியில் குத்திப் பதிந்து 'றொக்கட்' மற்றும் குண்டுத் தாக்குதல்களை நடத்தின.

இந்தவேளையில் 'அவ்ரோ' விமானம் ஒன்று கோட்டைப் பகுதிக்கு மேலாக ஊர்ந்தபடி பொதிகளைப் போட்டுக் கொண்டிருந்தது.

கச்சேரி - நல்லூர் வீதியில் மூத்தவிநாயகர் கோவிலுக்குச் சமீபமாக குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டதில் 'கராஜ்' ஒன்று பலத்த சேதமடைந்தது. அருகிலுள்ள மரக்காலையும், ஒரு வீடும் சேதமுற்றன. அங்கு மூவர் காயமடைந்தனர்.

'கராஜ்' உரிமையாளர் செல்வமாணிக்கம் சுப்பிரமணியம் மற்றும் தனபாலசிங்கம், சின்னத்தம்பி ஆகியோரே காயமடைந்த மூவருமாவர்.

நல்லூர் கோவிலுக்குச்சமீபமாக மூன்று இடங்களில் 'றொக்கட்' தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

கோவிலுக்கு முன்புறமாக- சுமார் 400 யார் தொலைவில் ஏவப்பட்ட றொக்கட் கடை ஒன்றின் சுவரைத் துளைத்து உட்சென்று சேதமாக்கியது.

யாழ். மாநகர சபை அருகில் நடத்தப்பட்ட றொக்கட்தாக்குதலினால் அப்பகுதியில் ஒரு வீடு பலத்த சேதமுற்றது. மற்றும் இரு வீடுகள் சிறிதுபாதிக்கப்பட்டன.

### அறுவர் காயம்

யாழ். மாநகர சபைக்கும்

(3ஆம் பக்கம் பார்க்க)

# ஈரானுடன் உறவு கொள்ள ஈராக் முன்வந்துள்ளது!

பக்தாத், ஆக. 16

ஈரானுடன் மீண்டும் உறவை ஏற்படுத்திக் கொள்ள ஈராக் விருப்பம் தெரிவித்துள்ளது.

முதற்கட்டமாக, ஈரானிய பிரதேசத்தில் தற்போது நிலைகொண்டுள்ள தனது துருப்புக்களை விலக்கிக் கொள்ளவும் யுத்தக்கைதிகளைப்பரிமாறிக் கொள்ளவும் ஈராக் முன்வந்துள்ளது.

வளைகுடா நெருக்கடியில் ஈரானின் ஆதரவைப் பெறும் முயற்சியாக ஈராக்கின் மனமாற்றம் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வேண்டுகோள்

யாழ் மாவட்ட உத்தரவு பெற்ற வர்த்தகர்கள் அனைவரும் உடனடியாக தலைவர் S. செல்லத்துரை அவர்களைச் சந்திக்கும் வண்ணம் வேண்டுகிறேன்.

(14039)

### காணவில்லை

இல. 08 AB 9947 உடைய Asia பெண்கள் துவிச்சக்கர வண்டியை 07 - 08 - 90 இல் மானிப்பாய் வைத்திய சாலையில் ஏற்பட்ட குண்டுவீச்சின் பின்னர் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் காணாமல் போய்விட்டது தயவுசெய்து தவறுதலாக எடுத்தவர்கள் 63, குருசோ வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (14040)

சகோதரா நீர் வீட்டை விட்டு புறப்பட்ட நாளில் இருந்து உமது தந்தையார் படுக்கையில் இருக்கிறார் அம்மாவும் ஊண் உறக்கம் இன்றி வாடுகிறார். நாங்கள் செய்வதறியாது திகைத்து நிற்கிறோம். உடனே வந்து தாயாரை பார்க்கவும், அன்புக்குரிய சகோதரிகள் ஆனைக்கோட்டை வடக்கு ஆனைக்கோட்டை.

(14042)

### தவறிவிட்டது

நடராசா சடாச்சரம் அடையாள அட்டை இல. 600680412 X தவறிவிட்டது கிடைத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்திலோ அன்றி 66/6, இந்து மகளிர் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.

(13634)

### ஓமேகா

எங்களிடம் திருத்துவதற்கு உங்களால் ஒப்படைக்கப்பட்ட மின் உபகரணங்களை ஏழு நாட்களுக்குள் திருப்பி எடுக்குமாறு பணிவாக வேண்டுகிறோம. ஓமேகா, சேச் லேன், கொககுவில் கிழக்கு, (குளப்பிட்டிச் சந்திக்கு அருகில்) [14035]

## கலப்படம் புலிகளால் கண்டு பிடிப்பு

கோப்பாய், ஆக 16

நீர்வேலி ப நோ. கூ, சங்கத்தைச் சேர்ந்த இரு கிளைகளில் பொருள்களில் கலப்படம்செய்யப்பட்டதாக விடுதலைப் புலிகளினால் கண்டு பிடிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் எச்சரிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-72)

## புலிகளின் தலைமை- - -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் போராட்டத்துக்கு ஒரு முன்னெடுப்பாகவும்—

அந்தப் போராட்டத்தில விஞ்ஞான பூர்வமான அணுகு முறைகளைப் புகுத்தவும் ஈரோஸ் அமைபபு தனது செயற் திட்டங்களை ஆரம்ப காலத்திலேயே அமைத்துக் கொண்டது'— என்றார் அவர்.

'1975-1983 ஆம் ஆண்டு காலகட்டத்தில் போராட்டம் தொடர்பான புதிய கண்ணோட்டத்தை வெளிப் படுத்துவதில் ஈரோஸ் அமைப்பு வெற்றி பெற்றது' என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தக் காலகட்டத்தில் தமது அமைப்பின் செயற்பாடு எப்படி அமைந்தது என்பதை அவர் விளக்கினார்.

'வடக்கு, கிழக்கு மலையக மக்களை ஒன்று திரட்டி அரசியல், இராணுவ, பொருளாதார வேலைத்திட்டங்களுக் கூடாக மக்களை அணுகுவதை எமது செயற்பாடாக அமைத்தோம்

மார்சஸிய. லெனினிஸ அடிப்படையில் வர்க்க ரீதியான போராட்டத்துக்கான முன்னெடுப்பை அப்போது செய்தோம்.

ஆனால் 1983 - 1987 ஆம் ஆண்டு காலகட்டத்தில் தேசிய விடுதலைப் போராட்டத்தில் கூடிய கவனம் செலுத்தவேண்டிய தேவை ஏற்பட்டது

அக்காலகட்டத்தில் பரந்துபட்ட தலைமையின் கீழ் இயக்கங்கள் ஐக்கியப்பட உழைத்தோம். அதற்காக ஈ. என். எல். எவ். என்ற கூட்டமைப்பை அமைத்தோம்.

அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை அது எமக்கு ஒரு பெரும் தோல்வி. ஒரு பின்னடைவை ஏற்படுத்தியது

### 1987 இற்கு பிறகு விட்ட தவறுகள்

1987 இற்கு பிற்பட்ட காலத்தில் நாம் விட்ட தவறுகளே எம்மை இன்று இந் நிலைக்கு இட்டுச் சென்றது என்றால் அதில் தவறில்லை

1987 இல் இந்தியப்படையுடன் சேர்த்துத் திணிக்கப்பட்ட இடைக்காலத் தீர்வு தக்குப்பிடிக்க முடியாதது என்பதை உணரவோ—

அந்த அடிப்படையில் உணர்ந்து செயற்படவோ நாம் தவறிவிட்டோம்'

எமது பூரண பாதுகாப்பை உறுதி செய்யாத நிலையில் ஆயுதத்தைக் கையளிப்பதோ இடைக்காலத் தீர்வை ஏற்பதோ பிழை என்பதை உணருவதில் நாம் தவறுவிட்டு விட்டோம்.

மற்றைய இயக்கங்கள் எல்லாம் போராட்டத்தை அடகு வைத்து சுயநோக்குடன் செயற்பட்ட அந்த வேளையில்—

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒன்றுதான் ஆயுதம் தாங்கிய போராட்ட உணர்வை மழுங்கடிக்கவிடாமல், தமிழர் பாதுகாப்புக்கு உணர்வுபூர்வமான குறியீடாகச் செயற்பட்டது.

இந்தக் காலகட்டத்தில் நாம் விட்ட தத்துவ ரீதியான தவறுகளே எம்மை இந் நிலைக்கு இட்டுச் சென்றிருக்கின்றன

### நிர்ப்பந்தம் என்பதில் அர்த்தமில்லை

எமது அமைப்பைக் கலைப்பதற்கான நிர்ப்பந்தங்கள் அல்லது நெருக்கடிகள் வெளியில் இருந்து வந்ததாகக் கூறுவதில் அர்த்தமில்லை. நாம் 1987 ஆம் ஆண்டு காலகட்டத்தில் விட்ட தவறுகள் இப்போது எமக்கு நெருக்கடிகளைத் தோற்றுவித்திருக்கின்றன என்பது தான் உண்மை.

இப்போதைய நிலையில் - போராட்ட சூழ்நிலையில் — நாம் வெறும் அரசியல் கட்சியாக இருப்பதில் அர்த்தம் ஏதும் இல்லை.

கட்சியாக இல்லாவிட்டால், நாம் ஓர் இயக்க ரீதியான போராட்ட அமைப்பாகச் செயற்படவேண்டும். ஆனால் இரண்டு காரணங்களுக்காக அந்த வழியை நாம் நாடவில்லை.

ஒன்று —

எமது அமைப்பு இயக்கரீதியான — இராணுவ ரீதியான - வடிவமைப்பை, செயற்பாட்டை இழந்துவிட்டது. இந்த நிலையில் அதனை பழைய நிலைக்குக் கட்டி எழுப்ப வேண்டுமாயின் பெரும் மூலவளத்தைத் திரட்டிச் செலவழிக்க வேண்டிய தேவை ஏற்படும். ஆனால் தற்போதைய போராட்ட சூழ்நிலையில் அது பொருத்தமற்றதும் சாத்தியமற்றதுமாகும். நாம் அப்படியான முயற்சியை எடுப்பதை மக்களும் ஏற்கமாட்டார்கள்.

இரண்டாவது -

இன்று விடுதலைப்போராட்டம் ஒரு தீர்க்கமான நிலையை எட்டியிருக்கிறது. இந்தக் காலகட்டத்தில் சகல போராட்டச் சக்திகளும் ஒரு பரந்துபட்ட தலைமையின் கீழ் வரவேண்டிய கட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

இந்த வரலாற்று ரீதியான சந்தர்ப்பத்துக்கு முன்னோடியாக, நாமே எம்மைத் தடை செய்து, ஒரு தலைமைத் துவத்தின் கீழ் போராட்ட உணர்வைத் திரட்ட வழி செய்கிறோம்.

இதனால் தான் நாம் எமது சொத்துகள், ஆயுதங்கள், மூலவளங்களை ஒரு தலைமையின் கீழான போராட்டத்துக்கு ஒப்படைக்க முன் வந்தோம்.

### இயக்கமல்ல உணர்வே முக்கியம்

ஈரோஸ் இயக்கம் கலைக்கப்படுகிறது. வெளிநாடுகளில் உள்ள எமது கிளைகளும் கலைக்கப்படுகின்றன. இயக்கம் கலைக்கப்படலாம்; இயக்கம் முக்கியமல்ல; போராட்ட உணர்வுதான் முக்கியம்

போராட்ட உணர்வு எம்மைவிட்டு நீங்கவில்லை ஈரோஸ் என்ற தளத்தைக் கலைத்து புதிய தளத்தில் எமது போராட்ட உணர்வை இணைத்துக் கொள்வதன் மூலம் எமது பங்களிப்பைத் தொடர்ந்துசரிவரச் செலுத்த முடியும் என நினைக்கின்றோம்

### ஏற்கனவே எடுத்த முடிவுகள்

விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தை ஏற்பது என்பதும்—

எம் பி பதவிகளை துறப்பது என்பதும் —

ஆயுதங்களை ஒப்படைப்பது என்பதும்—

நாம் ஏற்கனவே எடுத்த முடிவுதான் பெப்ரவரி 5 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற எமது கூட்டத்தில்— அனேகமான பொதுக்குழு பிரதிநிதிகள் முன்னிலையில்— எடுக்கப்பட்ட முடிவுதான் அது.

இந்த விடயத்தில் நடைமுறை ரீதியான செயற்பாட்டில் எமக்கிடையே கருத்து வேறுபாடு இருந்திருக்கலாம். ஆனால் இறுதி முடிவில் வேறுபாடுகள் அனேகமாக இல்லை என்றே கூறலாம்.

### மலையக மக்கள்

அமைப்பைக் கலைப்பதான இந்த முடிவு வடக்கு, கிழக்கு சூழ்நிலைக்கு ஏற்ப எடுக்கப்பட்ட ஒன்று என்பதை ஏற்றுக் கொள்கிறேன். இந்த விடயத்தில் மலையக மக்களின் உணர்வை நாம் புறக்கணித்து விட்டோம் என்று அவர்கள் வேதனைப் படுவதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். மலையக மக்கள் மத்தியில் எமது முடிவு குழப்பத்தையும் விரக்தியையும் ஏற்படுத்தியிருக்கிறது என்பது உண்மையே.

ஆனால் காலத்தின் கட்டாயத்தை உணர்ந்து அவர்கள் தங்களுக்குரிய பாதையை இப்போது செப்பனிட்டு, போராட்ட வடிவை வடிவமைத்துக் கொள்ள வேண்டும் அங்குள்ள சக்திகளுடன் இணைந்து அவர்கள் செய்யும் ஏற்பாடுகளுக்கு தார்மீக ரீதியில் ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்க வேண்டிய கடமை வடக்கு; கிழக்கு மக்களுக்கு இருக்கிறது.

மற்றைய அமைப்புகள், இயக்கங்கள் தமது அடிப்படை குணாம்சத்தை இழந்து விட்டன.

ஆனால் விடுதலைப்புலிகள் இயக்கம் ஒன்றே தனித்துவமாக, சொந்தக்காலில்நின்று, தனக்குரிய போக்கில செயற்பட்டு வருகின்றது.

இன்று ஆறு கட்சிக் குழுக்கள் கொழும்பில் இடைக்காலத் தீர்வு பற்றி பேசுகின்றன.

ஆனால் விடுதலைப் புலிகள் இங்குநடத்தும் போராட்டத்தினால் தான் அங்கிருந்து அந்தளவுக்காவது இலங்கையுடன் அவர்கள் பேசும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை புரியாமல் அவர்கள் அங்கே அரசியல் வியாபாரம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அத்தகைய அப்பட்டமான துரோகத்தை செய்ய நாம் தயாரில்லை.

இந்திய அரசு கொண்டு வந்த முறையினாலோ —

அல்லது விடுதலைப் புலிகள்— ஸ்ரீலங்கா அரசு பேச்சுக்களினாலோ —

எந்த வித இடைக்காலத் தீர்வும் கிட்டவில்லை. எமது பிரச்சினைக்கு இடைக்காலத் தீர்வு— தற்காலிக ஏற்பாடு— எதுவும் இனிப்பயன் இல்லை. இறுதி தீர்வை எட்ட போராடுவதே ஒரே வழி

— இவ்வாறு அவர் கூறினார். (உ-5-3)

## உணவுக் கப்பல்

கொழும்பு, ஆக. 16

1.800 மெட்ரிக் தொண் அரிசி, சீனி மற்றும் உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு கப்பல் ஒன்று வியாழன் கொழும்புத்துறைமுகத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் புறப்படுகிறது. [இ-எ]


## இடமாற்றம்

★ மண்டேலா ரேடர் ★

இல. 02, பஸ் நிலையம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரியில் இயங்கி வந்த எமது புத்தக சாலை தற்போதைய நாட்டின் நிலை காரணமாக கீழ் காணும் முகவரியில் 01 - 08 1990 தொடக்கம் இயங்குகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

மண்டேலா ரேடர்,
(புத்தகசாலை)
550/8A, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

[13973)


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. இராசையா மகாலிங்கம்

(யாழ். கொழும்பு ராம்சேது பங்காளர்)

| மண்ணுலகில்: | விண்ணுலகில்: |
| --- | --- |
| 16 - 08 - 1939 | 21 - 07 - 1987 |

திதி: 16 — 08 — 1990

அன்பின் அப்பா நீங்கள் இல்லாத மனைவி பிள்ளைகளாய் நாம் என்றும் எண்ணவில்லை ஆயினும் இது தான் விதி எமக்கு என ஆகிவிட்டு சென்று விட்டீர்கள். நீங்கள் உள்ள வரை அஞ்சாத நாம் இப்போது அஞ்சி உயிர் வாழ்கின்றோம் விலை மதிப்பு ஏதுமில்லா சிகரமே எங்கு நீங்கள் சென்று மறைந்து விட்டீர்கள் பாரில் எங்களுக்கு யார் துணை இறைவன் தான் பதில் தருவான்.

அன்னாரின் ஆத்மா சாந்திக்கு இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

58A, பிரப்பங்குளம் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். [14046]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முளைத் திறன் இல்லாத விதைகள் விற்பனைக்கு வரலாம்; கவனம்!

## உதவிப் பணிப்பாளர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 16

முளைத்திறன் இல்லாத காய்கறி விதைகளும் மேட்டு நிலப் பயிர் விதைகளும் விற்பனைக்கு வரலாம், விவசாயிகள் கவனமாக இருக்கவேண்டும்.

பரந்தனில் உள்ள விதைகளுக்குப் பொறுப்பான உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. ஆர். கந்தையா மேற்கண்டவாறு எச்சரிக்கை செய்துள்ளார்.

கடந்த காலங்களில் பரந்தன் பகுதியில் நிகழ்ந்த அசம்பாவிதங்களின் போது களஞ்சியம் உடைக்கப்பட்டு விதைகள் களவாடப்பட்டுள்ளன.

இந்த விதைகள் யாவும் (மிளகாய் விதை உட்பட) 1989 ஆம் ஆண்டுக்கும் அதற்கு முற்பட்ட காலத்துக்கும் உட்பட்டவை ஆகும். அவையே விவசாயிகளுக்கு விற்கப்படலாம் என்று தற்போது எச்சரிக்கப்பட்டுள்ளது.

விவசாய திணைக்களத்தால் அடைக்கப்பட்ட விதைப் பைகளில் ஆண்டு குறிக்கப்பட்டுள்ளது என்றும் 1990 ஆம் ஆண்டு குறிக்கப்பட்ட விதைப் பைகளே தற்போது சந்தைகளில் விற்கப்படுகின்றன என்றும் உதவி விவசாயப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (இ)

# இலங்கையர் நலன் கவனிக்க வளைகுடாவுக்குப் பயணம்

கொழும்பு, ஆக. 16

வளைகுடா நாடுகளில் தொழில்புரியும் சுமார் 5 லட்சம் இலங்கையரின் பாதுகாப்பு மற்றும் நலன்கள் பற்றி நேரில் ஆராய தொழில் அமைச்சர் ஜி எம். பிரேமச்சந்திரா நேற்று ஜோர்தான், ஈராக் ஆகிய நடுகளுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் பணிப்பின் மீது அமைச்சர் தனது விஜயத்தை மேற்கொண்டிருக்கிறார். (இ - எ)

# கால் நடைகளை கட்டி வளர்க்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக 16

தமிழீழத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஆடுகள், மாடுகள், பன்றிகள் என்பவற்றை மக்கள் கட்டி வளர்க்க வேண்டும். விவசாயிகள் பெரும் சிரமத்தின் மத்தியில் பயிரிட்ட விளை நிலங்கள் கட்டாக் காலிகளால் அழிந்து போகும் ஆபத்து இருந்து வருகிறது.

தமிழீழ ஆய்வு நிறுவனம் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# இடம் பெயர்ந்தவர்கள் தபால்களைப் பெற வசதி

யாழ்ப்பாணம், ஆக. 16

யாழ்ப்பாண மாநகரசபைப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தமது கடிதங்களை யாழ். தபால் நிலையத்தில் தினமும் காலை 10 மணிக்குப்பின்னர் வந்து பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ்ப்பாணம் தபால் நிலைய அதிபர் தெரிவித்தார்

பாதிக்கப்படாத இடங்களுக்கான கடிதங்கள் திங்கட்கிழமை முதல் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் கொழும்பில் இருந்து வந்த கடிதங்களை விநியோகிக்கும் வேலைகள் இந்தவார இறுதிக்குள் முடிவடையும் என்றும் அவர் சொன்னார்.

பதிவுத் தபால்கள் தரம் பிரிக்கும் வேலைகள் நடைபெற்றுவருவதாகவும் விரைவில் அவை விநியோகிக்கப்படும் என்றும் அவர் கூறினார். [ஒ3]

# வடமராட்சி ஆசிரியர் ஒன்றியம்

வடமராட்சி, ஆக 16

வடமராட்சி ஆசிரியர் ஒன்றியம் என்ற அமைப்பின் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு வேலாயுதம் மகா வித்தியாலய மண்டபத்தில் திரு. ந. அனந்தராஜ் தலைமையில் நடைபெறும்.

வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் பிரிவிலுள்ள சகல ஆசிரியர்களையும் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ-118)

# வடக்கே செல்ல விரும்பாத சிப்பாய் தற்கொலை!

கொழும்பு, ஆக. 16

வடபகுதி இராணுவ முகாமுக்கு இடம் மாறிச் செல்லவிரும்பாத இராணுவச் சிப்பாய் ஒருவர் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

பலப்பிட்டியைச் சேர்ந்த எம். சுனில் சாந்த என்பவர் அம்பாந்தோட்டை இராணுவ முகாமில் பணிபுரிந்து வந்தார்.

வடக்கு இராணுவ முகாமுக்குச் செல்லும்படி அவருக்கு இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டது.

இடமாற்றத்தை ரத்துச் செய்ய இரண்டு மாதங்களாக அவர் முயற்சி எடுத்து வந்தார். அது பலனளிக்காமல் போகவே கிருமிநாசினியை அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். (இ - எ)

# மாநகரசபை அலுவலகம் 20 முதல் முழு அளவில்

யாழ்ப்பாணம், ஆக. 16

யாழ்ப்பாணம் மாநகரசபை எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மீண்டும் முழு அளவில் செயற்பட உள்ளது என்று மாநகரசபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

20 ஆம் திகதி மாநகரசபை ஊழியர்கள் அனைவரும் கடமைக்குச் சமுகமளிக்க வேண்டும் என்றும் சகல குழுத் தலைவர்களும், சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9-00 மணிக்கு நல்லூர் இந்து விடுதி அலுவலகத்தில் சந்திக்குமாறும் ஆணையாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்ற விமானத் தாக்குதலின் போது மாநகரசபை கட்டடங்கள் சேதம் அடைந்ததும், தற்போது ஆணையாளர் அலுவலகம் உட்பட சில பிரிவுகள் மட்டும் நல்லூரிலுள்ள இந்து விடுதியில் செயற்பட்டுவருவதும் தெரிந்தவையே. (இ)

## நல்லூர் பகுதியில்- - -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முத்திரைசந்திக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு 'றொக்கட்' வீச்சில் அப்பகுதியில் சுச்சான் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த அறுவர் காயமடைந்தனர்.

வள்ளியம்மை [பரந்தன்], பாலசுப்பிரமணியம் [பரந்தன்], மகனராஜா [நல்லூர்], சீதாதேவி [கிளிநொச்சி] கணேசமூர்த்தி [முரசுமோட்டை], சுரேந்திரன் [வட்டுக்கோட்டை], ஆகியோரே காயமடைந்த அந்த அறுவரும் ஆவர்.

இதேவேளை- பிற்பகல் 4.55 மணியளவில் நகருக்கு வந்த 'அவ்ரோ' விமானம் ஒன்று கோட்டைப் பகுதியில் பொதிகளைப் போட்டது. அதைத் தொடர்ந்து வந்த பொம்மர் ஒன்று நீண்ட நேரமாக வானத்தில் சுற்றியபடி இருந்தது. இடையிடையே அப்பகுதியில் குண்டு வீச்சுத் தாக்குதல்களையும் அது நடத்தியது. (ஒ'5-143)

# இடம்பெயர்ந்த ஆசிரியர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 16

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு அப்பால் உள்ள வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை நல்லூர் சாதனா பாடசலையில் நடைபெறும்.

# தமிழர் அமைப்புகளின் பிரதிநிதிகள் பிரேமதாஸாவைச் சந்தித்தனர்

கொழும்பு, ஆக. 16

ஐந்து தமிழர் அமைப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக்குழு ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை மாலை ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியது.

புளொட் சார்பில் கரவை கந்தசாமி, ஈ.பி.டி.பி. சார்பில் ரமேஷ், சிவதாஸன், டக்ளஸ் தேவானந்தா, ரெலோ சார்பில் கே கருணாகரன், ஜே. திவ்வியநாதன். திரு. ஸ்ரீகாந்தா, ஈ.பி.ஆர். எல்.எப். சார்பில் ஜனாப் அபுயூசுப், திரு. குகனேஸ்வரன், ஈ. என். டி. எல். எப். சார்பில் எம். கே. ராஜா ஆகியோர் தூதுக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

பேச்சுக்கள் ஒரு மணி நேரம் நீடித்தன

கிழக்கு மாகாணத்தில் அகதி முகாம்களில் உள்ள தமிழர்களும் ஆலயங்களில் தஞ்சமடைந்துள்ள தமிழர்களும் ஆயுதம் தரித்த முஸ்லிம் குழுக்களால் கொல்லப்பட்டுவருகிறார்கள் என்பதை தூதுக்குழுவினர் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

தமிழர்கள் தங்கியுள்ள அகதிமுகாம்கள், ஆலயங்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்றும் தூதுக்குழுவினர் கேட்டுக்கொண்டனர்

விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் அரசு நடத்தும் யுத்தத்தில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது வேதனை தருகிறது என்றும் தூதுக்குழுவினர் தெரிவித்தனர்.

அனைத்து சமூகங்களையும் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி தூதுக்குழுவினரிடம் உறுதியளித்தார்.

இச்சந்திப்பின் போது பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா, ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிராட்மன் வீரக்கூன், பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா பொலீஸ்மா அதிபர் எர்னஸ்ட் பெரேரா, முப்படைகளின் தளபதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (இ-எ)

# பெற்றோல் டீஸல் விலை உயர்வு

கொழும்பு, ஆக. 16

கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் பெற்றோலியப் பொருள்களின் விலைகளை அரசு உயர்த்தியுள்ளது.

புதிய விலைகள் வருமாறு;

ஒரு லீற்றர் பெற்றோல்– 25 ரூபா

ஒரு லீற்றர் டீஸல் 11 ரூபா

ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 8 ரூபா

உணவு முத்திரை வைத்திருப்பவர்களுக்குச் சலுகை அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்கப்படும். (இ - எ)

# உ. அ. அதிபர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக 16

யாழ். மாவட்ட உணவு விநியோகம், நிவாரண வேலைகள் தொடர்பான உதவி அரசாங்க அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு செயலகத்தில் நடைபெறும். (இ-3)

## திருமனலயில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஹெல்மெட் — 9, ஏ. கே. ரவை -- 1,400, புல்லட் புறூவ் ஜக்கட் -- 2, ஹோல்சர் -- 9, கிற்பாக் -- 1, 203-ஷெல்- 6, ரி. 81 கிரனேட் -1 (உ-5)

## ஈழத்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்காக நாம் காத்திருக்கிறோம்.

இலங்கைத் தமிழர்களின் இன்னல்களை நீக்க மத்திய அரசு ஏற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்தச் சுதந்திரநாளில் வலியுறுத்துகிறோம்.

ஈழத் தமிழர்தம் துயர்தீர நாம் துணைநிற்போம். அந்தத் தமிழ்ச் சகோதரர்கள் இன்று தணல்வீழ் புழுக்கள்; நாளை அந்தத் தமிழர்கள் நம்மால் தப்பிப் பிழைத்தனர் எனும் நல்ல நேரத்தை உருவாக்கிட இந்த நாளில் சூளுரைப்போம்'' - இப்படி திரு. கருணாநிதி தனது உரையில் கூறிமுடித்தார்.

சென்னையில் நடந்த சுதந்திரதின விழாவில் பேசுகையில் அவர்தெரிவித்ததாவது:-

தமிழீழத்தில் நிரந்தர அமைதி ஏற்பட மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கைத் தமிழர் துயர் போக்க நாம் உறுதி பூணுவோம்''-என்றார். (அ-எ)

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

### சுடரெனவே வந்திடுவாய்!

மென்மலரும் உன்னடியில் மொய்த்தவுடன்
தாள்சிவக்கும்
இன்னிசையும் உன்செவியில் எண்டிசையும்
தான்சிறக்கும்
வன்மனதைக் கொண்டவர்தம் ஷெல்லடியும்
வேட்டொலியும்
உன்மனதை என்செயுமோ உமைமகனே
சண்முகனே

ஆழ்கடலின் முத்தனைய அரன்மகனே வேல்முருகா
தாழ்வில்லா வுயரத்தில் ஹெலி பொம்மர் வாட்ட நிதம்
வாழ்விதுவா வெனத்தமிழர் வாடிமனம் வருந்துகின்ற
சூழ்வினையை நீக்கிடவே சுடரெனவே வந்திடுவாய்

— உடுவில் அ. அரவிந்தன்.

[இன்று நல்லூர் கந்தசுவாமி ஆலய 21 ஆம் திருவிழா]

# இந்தியா மீது நம்பிக்கை தெரிவித்து பிரேமா வாழ்த்து

இலங்கையின் இறைமை, ஒற்றுமையைப் பாதுகாக்க இந்தியா உறுதி அளித்து அதன்படி செயல்படுவது எமக்கு நம்பிக்கை தருகிறது

இந்திய சுதந்திர தினத்தை ஒட்டி ஜனாதிபதி வெங்கட்ராமனுக்கு அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி பிரேமதாஸா முன் கண்டவாறு கூறியிருக்கிறார்.

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை, இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள, தீவிரவாதிகளுக்கு இந்தியாவில் இடமளிப்பது இல்லை என்று இந்திய அரசு அளித்த வாக்குறுதிகள் இரு நாடுகளின் உறவுகள் மேலும் பலமடைய உதவும் என்று நம்புவதாகவும் திரு. பிரேமதாஸா நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஈரோஸ் பிரதிநிதிகளாக இறுதியாக சந்திக்கிறோம்"

## பத்திரிகையாளரிடம் பாலகுமாரன்

யாழ்ப்பாணம், ஆக. 16
''ஈரோஸ் அமைப்பின் பிரதிநிதிகள் என்ற முறையில் பொது மக்களையோ, மக்கள் பிரதிநிதிகளையோ நாம் சந்திப்பது இதுவே இறுதியானதாகும்''.

— இவ்வாறு நேற்று பத்திரிகையாளர்களைப் பார்த்துக் கூறினார் திரு. வேலுப்பிள்ளை பாலகுமாரன்.

'' தனிப்பட்ட முறையில் பாலகுமாரனாக நான் உங்களை இனிச் சந்திப்பேன்'' என்றார் அவர்.

'' இதுவரை காலமும் ஈரோஸ் அமைப்புக்கு நியாய பூர்வமான முறையில் ஒத்துழைப்புக் கொடுத்ததற்காக இந்த இறுதிச் சந்தர்ப்பத்தில் சகல பத்திரிகைகளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்'' என்றும் அவர் சொன்னார்.
(உ-3-5)

# கொழும்பிலிருந்து பணம் கொண்டுவருவதற்கு முயற்சி

## பணப்புழக்கம் பெருமளவு பாதிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 16
யாழ். மாவட்டத்தில் பணப்புழக்கம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால் கொழும்பில் இருந்து பணம் கொண்டுவர முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நேற்றுக் காலை நல்லூரில் நடைபெற்ற வங்கியாளர் கூட்டத்தில் இது தொடர்பாக ஆராயப்பட்டது.

பணப்புழக்கம் சீர்கெட்டுள்ளதால், சம்பளம், பென்ஷன் போன்ற கொடுப்பனவுகளை செய்யமுடியாதுள்ளதாக வங்கியாளர் தெரிவித்தார்.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு மூலம் கொழும்பில் இருந்து பணம் எடுத்துவர அரச அதிபர் முயற்சி எடுக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.
(இ-5)

# மரண அறிவித்தல்கள்

## கனகசபை இளங்கோபன்

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த கனகசபை இளங்கோபன் (சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை) 11-08-90இல் அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. இளையதம்பி கனகசபை, திருமதி சிவபாக்கியம் கனகசபை ஆகியோரின் அன்புப் புதல்வனும், சடகோபன் (ஜேர்மனி), திருமதி இந்திராணி, இந்திரன் (பிரான்ஸ்), நந்தகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு அண்ணாவும், திரு. இந்திரனின் (பிரான்ஸ்) அன்பு மைத்துனரும், மதுராவின் அன்பு மாமனாருமாவார்.

இவரது மரணச் சடங்குகள் பாலனடைப்பு தெல்லிப்பழையில் 12-08-90 அன்று நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
க. சிவபாக்கியம்

யார்வத்தை,
கொல்லங்கலட்டி.
[14041]

## திரு. சின்னத்துரை இராசதுரை

கொழும்பு-13, ஜினானந்தமாவத்தை, 10/4ஆம் இலக்கத்தில் வசிப்பவரும், கொழும்பு மாநகரசபை, ஓய்வு பெற்ற கஸ்ட நிவாரண அதிகாரியுமான திரு. சின்னத்துரை இராசதுரை 14-08-1990ஆம் திகதியன்று சிவபதம் எய்தினார்.

இவர் மாணிக்கத்தின் அன்புக் கணவரும், சித்திரா (இங்கிலாந்து), யமுனா, ரேணுகா (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், யாழ்ப்பாணம் சட்டத்தரணியும், வட பிராந்தியப் போக்குவரத்துச் சபைத் தலைவருமான திரு. சி. கனகரத்தினம். ஜே. பி. யூ. எம். அவர்களின் அன்புச் சகோதரனும், குலேந்திரன், பாலகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், தாரணி, விநோதன் ஆகியோரின் அன்புப்பேரனும், திரு. பொ. கனகசபாபதி, டாக்டர் பொ. கனகலிங்கம், திருமதி சரஸ்வதி நடராஜா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள், அவரது கொழும்பு இல்லத்தில், 15 08-1990ஆம் திகதி, புதன்கிழமையன்று நடைபெற்று பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில், தகனம் செய்யப்பட்டது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
சி. கனகரத்தினம் ஜே. பி. யூ. எம்.
சட்டத்தரணி, தலைவர்,
வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை.

''சிவஸ்தான்''
நல்லூர், யாழ்ப்பாணம்.
[14043]

# செய்திச் சாரம்

## குண்டுவீச்சுக்கு 15 தமிழர் பலி

யாழ்ப்பாணம், ஆக. 16
மட்டக்களப்பு மாவட்டத்தில் போராவெளி, ஈச்சந்தீவு பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சுக்கு 15 தமிழ் பொதுமக்கள் பலியாகினர். மேலும் 25 பேர் காயமடைந்தனர். மூன்று வீடுகள் சேதமுற்றன. [ஒ]

## இரு தமிழர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஆக 16
அம்பாறை மாவட்டம், கோமாரி கிராமத்தில் இரு தமிழ் பொதுமக்களை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர். (ஒ)

## காரைநகரில் குண்டுவீச்சு பீரங்கித்தாக்கு

யாழ்ப்பாணம், ஆக. 16
காரைநகர்ப் பகுதியில் நேற்று முன் தினம் [செவ்வாய்] மாலை இரு தடவைகள் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

ஊர்காவற்றுறை -தம்பாட்டிப் பகுதிகளிலுள்ள இறங்கு துறைகளை இலக்கு வைத்தே குண்டுகள் வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து காரைநகர் கடற்படை முகாமில் இருந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல், பீரங்கித் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

காரைநகரில் இருந்து நடத்தப்பட்ட தாக்குதலின்போது, சில குண்டுகள் தீச்சுவாலையுடன் சுழிபுரம் வடக்குப் பகுதி கிராமங்களிலும் வந்து விழுந்து வெடித்தன. இதனால் சில வீடுகள் சேதமடைந்தன. [ஒ]

## கிரானில் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஆக. 16
கிரானில் கடந்த திங்களன்று மூன்று குடும்பஸ்தர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு முகாமுக்கு கொண்டுசெல்லப்பட்டனர். அவர்களுக்கு ஏற்பட்ட கதி குறித்து எந்தவிதத் தகவலும் வெளியாகவில்லை.

4 பிள்ளைகளின் தந்தையான ஞானமுத்து(வயது 60) மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி குணசேகரன் (வயது 28), ஐந்து பிள்ளைகளின் தந்தையான தம்பிராஜா நடராஜா (45 வயது) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். (உ)

## 2 ஆவது டெஸ்ட் முடிவடைந்தது

லண்டன், ஆக. 16
மான்செஸ்டரில் இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற 2ஆவதுகிரிக்கெட் டெஸ்ட் நேற்று முன் தினம் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

ஓட்ட விவரம் வருமாறு:-
இங்கிலாந்து - முதல் இன்னிங்ஸ் - 519 ஓட்டங்கள், இரண்டாவது இன்னிங்ஸ் - 4 விக்கெட் இழப்புக்கு 320 ஓட்டங்கள்.

இந்தியா-முதல் இன்னிங்ஸ் 4 32 ஓட்டங்கள், இரண்டாவது இன்னிங்ஸ் - 6 விக்கெட் இழப்புக்கு 342 ஓட்டங்கள்

ஏற்கனவே லோர்ட்ஸில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றமை தெரிந்ததே. (உ)

ஈழத் தமிழர் பிரச்சினை:

# பேச்சுக்கள் மூலம் தீர்வு காண இந்தியா ஈடுபட்டு வருகிறது

## சுதந்திரதின உரையில் வி.பி.சிங்

புதுடில்லி, ஆக. 16
இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் இந்திய அரசு ஈடுபட்டுள்ளது.

இவ்வாறு பிரதமர் வி. பி. சிங் நேற்று புதுடில்லி செங்கோட்டை கொத்தளத்தில் இருந்து 44 ஆவது சுதந்திர தின உரையை நிகழ்த்தும்போது கூறினார்.

பிரதமர் சிங் 70 நிமிடங்கள் பேசினார்.

அங்கு அவர் மேலும் சொன்னதாவது:-

நாட்டில் பிரிவினைவாதத்தைத் தூண்டும் வன்முறையாளர்களுடன் எக்காரணங் கொண்டும் அரசு இணக்கம் காணாது அந்நியச் சக்திகளின் தலையீட்டுக்கும் இந்தியா இடமளிக்காது.

நபி நாயகம் [ஸல்] அவர்களின் பிறந்த தினம் பொது விடுமுறையாக பிரகடனம் செய்யப்படும்.

அயல் நாடுகளுக்கு எதிராக பிரிவினைவாத, தீவிரவாத சக்திகள் இந்தியாவில் இருந்து செயல்பட அனுமதிக்கப்பட மாட்டாது

தரையில் இருந்து வானுக்கு ஏவப்படும் 'ஆகாஷ்' என்ற பெயரிலான நவீன ஏவுகணையை கடந்த செவ்வாய்க்கிழமை இந்தியா வெற்றிகரமாக பரீட்சித்தது.

இவ்வாறு அவர் கூறினார்.
[ஒ எ]

# அரச கட்டட சேதங்கள் பற்றி கொழும்புக்கு தகவல்

யாழ்ப்பாணம், ஆ 16
விமானத் தாக்குதல்களால் யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களின் கட்டடங்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து கொழும்பில் உள்ள அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு யாழ் அரச அதிபர் தெரியப்படுத்தி உள்ளார்.

விமானத்தாக்குதலால் சுச்சேரி ரயில்வே நிலையம், மானிப்பாய் வைத்தியசாலை பெற்றோலியம் கூட்டுத்தாபனம், சுன்னாகம் மின்சார சபை, இலங்கைவங்கி, மக்கள்வங்கி தலைமையகங்கள், யாழ். மாநகரசபை, காப்புறுதிக்கூட்டுத் தாபனம், தேசிய சேமிப்பு வங்கி உட்பட பல திணைக்களக்கட்டடங்கள் சேதமடைந்துள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.
(இ-5-3)

# கப்பலில் உணவுப் பொருள் சர்வோதயத்திற்கும் வரும்

யாழ்ப்பாணம், ஆக. 16
சர்வோதய அமைப்புக்கு கொழும்பில் இருந்து 500 தொன் உணவுப் பொருள்களுடன் கூடிய ஒரு கப்பல் எதிர்வரும் 23 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வரவிருக்கிறது.

சர்வோதய அமைப்பின் வட - கிழக்கு மாகாண இணைப்பாளர் திரு. ஜெகா செந்தில்நாதன் கொழும்பில் மேற்கொண்ட ஏற்பாட்டினை அடுத்து இந்தக் கப்பல் வரவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கப்பலில் வரும் உணவுப் பொருள்கள் அகதிகளின் தேவைக்கு வழங்கப்படும் என்று தெரியவருகிறது.
(ஒ-3)

# பிரயாணிகள் படகை இழுத்து சென்ற கடற்படைக் கப்பல்

யாழ்ப்பாணம், ஆக. 16
விடத்தல்தீவில் இருந்து எருக்கலம்பிட்டிக்கு சென்ற பிரயாணிகள் படகு ஒன்றை கடற்படைக் கப்பல் இழுத்துச் சென்றது.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை பகல் 1.30 மணி அளவில் இடம் பெற்றது.

இந்தியா செல்வதற்கு சென்ற அகதிகளும், மன்னார் செல்ல வேண்டிய மக்களும் இந்தப் படகில் இருந்தனர்.

கடற்படைக் கப்பலைக் கண்டதும் படகில் பிரயாணம் செய்த ஆண்கள் கடலில் பாய்ந்து நீந்திக்கரை சேர்ந்தனர்.

கடற்படையினர் படகை இழுத்துச் சென்ற சமயம் படகோட்டியுடன் சேர்ந்து 4 ஆண்களும் 20 பெண்களுமே படகில் இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.
(இ-3)

## தமிழகத்தில் 72 ஆயிரம் அகதிகள்

சென்னை, ஆக. 16
72 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் இதுவரை தமிழகம் வந்துள்ளார்கள் என்று தமிழக கல்வி அமைச்சர் க. அன்பழகன் நேற்றுத் தெரிவித்தார்.

சுதந்திர தினத்தை ஒட்டி இவர்கள் அனைவருக்கும் 37 லட்சம் ரூபா பெறுமதியான புத்தாடைகள் வழங்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.
[இ-எ]

# மரண அறிவித்தல்

## அருட்சகோதரி யூபிரேசியா லம்பேட்

வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி யூபிரேசியா இம்மாதம் 13ந் திகதி இறைவனடி சேர்ந்துவிட்டார். இவரின் பூதவுடல் இந்தியாவில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை ஏற்றுக் கொண்டு இவவின் ஆன்ம சாந்திக்காக செபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

மாகாணத் தலைவி,
மாகாண இல்லம்,
121, பிரதான வீதி
யாழ்ப்பாணம்.
[14047]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org